**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | **C.C No. 194/2010** |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |

| | | | | |
|---|---|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution | : | **PW - 1** |
| | | Defence | : | |
| | | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | : | ஜெயேஷ்குமார் |
| Father / Husband Name | : | பாஸ்கரன் |
| Village | : | புளியேறி ஹவுஸ், புத்தளம் டெம்பிள் ரோடு, மாகே போஸ்ட், |
| Taluk | : | பாண்டிச்சேரி மாநிலம் |
| Caste & Religion | : | இந்து |
| Calling | : | Electro Homeopathy Practioner |
| Age | : | 57/2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.09.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன், தட்டச்சர்**

**<u>C.C No.194/2010 22.09.2022</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 1.00**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து Electro Homeopathy Practioner ராக கேரள மாநிலம் கேலிகட்டில் செய்து வருகின்றேன். கடந்த 2001ம் ஆண்டில் கேலிகட்டில் Alternative Medical Conference நடைபெற்றது. அங்கு திரு துளசிதாசன் என்பவர் வந்து இருந்தார். தஞ்சாவூரில் நான்கரை வருடங்களுக்கான படிப்பு ஒன்று உள்ளது என்றும், அது தொடர்பான Pamplets ஆகியவற்றை வாங்கி பார்த்தேன். அந்த Batch 15 மாணவர்கள் சேர்ந்து இருந்தார்கள். மாதா மாதம் 15 நாட்களுக்கு வகுப்புகள் தஞ்சாவூரில் நடைபெறும். ஆறு மாதங்கள் கழித்து பரிட்சை நடத்தி ஒரு B.E.M.S., சான்றிதழ் வழங்கினார். இதற்கு நான்

**C.C No.194/2010 22.09.2022**

ரூ.50,000/- த்தை கொடுத்து இருந்தேன். அதில் ரூ.25,000/- வரைவோலையாகவும், மற்றும் ரூ.15,000/- , ரூ.10,000.- ஆகியவற்றை காசோலையாக வழங்கினேன். நான் துளசி தாசனிடம் 4 1/2 வருடங்களுக்கான படிப்பை எப்படி 6 மாத காலத்திற்குள் வழங்க முடியும் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் அது ஒரு Offer என்று கூறினார். பின்னர் நான் சந்தேகப்பட்டு N.E.H.M of India என்ற டெல்லி முகவரியில் விசாரித்தேன். அப்போது அவர்கள் கூறியது தஞ்சாவூர் கல்லூரிக்கு Affliation அனுமதி கிடையாது என்று கூறினார். நான் துளசிதாசனிடம் என்னை ஏமாற்றிவிட்டாய். நான் செலுத்திய பணத்தை திருப்பி தருமாறு கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் பணம் கொடுக்க மாட்டேன் என்று மிரட்டினார். பின்னர் நான் மாவட்ட குற்றப் பிரிவு அலுவலகத்தில் ஆய்வாளராக இருந்த திரு தாமோதரன் அவர்களை சந்தித்து மேற்கூறிய விபரத்தை கூறினேன். பின்னர் புகாரை எழுதி கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) அரசு தரப்பில் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.